# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆடி - 1 சனி 17.07.2021 மலர் - 2, இதழ் - 101


## கோயில் இடிப்பு இந்து முன்னணி போராட்டம்




விஜயபாரதம்

**கோ**வையில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்திற்காக மாநகராட்சியினர் ஹிந்து கோயில்களை மட்டும் குறிவைத்து இடிப்பதாக இந்து முன்னணியினர் குற்றம் சாட்டினர். இதனை எதிர்த்து கோவை, டவுன்ஹால் பகுதியில் மாநகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்தனர். இந்த போராட்டத்திற்கு காவல்துறை அனுமதி அளிக்கவில்லை. எனினும், அங்கு வந்து குவிந்த இந்து முன்னணியினர், மசூதிகளை இடிக்காமல் ஹிந்து கோயில்களை மட்டும் மாநகராட்சி குறிவைத்து இடிப்பதாக குற்றம் சாட்டினர். இந்து முன்னணியனரை எதிர்த்து, எஸ்.டி.பி.ஐ கட்சியினரும் திரண்டால் அப்பகுதியில் பதட்டம் நிலவியது. கூட்டத்தினரை கட்டுப்படுத்த, பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. அனுமதியின்றி போராட்டம் நடத்த முயன்ற இந்து முன்னணியினரை காவல்துறையினர் கைது செய்தனர்.

---

## வெற்றி வேல் வீர வேல்




விஜயபாரதம்

**கோ**வையில் சர்ச்சைக்குரிய தீவிர இடதுசாரி தன்னார்வ தொண்டு நிறுவனமான National Confederation of Human Rights Organizations (என்.சி.ஹெச்.ஆர்.ஓ), சமீபத்தில், பாரத ராணுவம், கோவை, மதுக்கரையில் உள்ள தனது படைப்பிரிவு தலைமையகத்தின் வாசலில், தனது தமிழ் போர் முழக்கமான ‘வெற்றி வேல் வீர வேல்’ என எழுதியுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதற்கு பதிலளித்த பாதுகாப்புத் துறை மக்கள் தொடர்பு அலுவலர், “இந்த முழக்கம் பல ஆண்டுகளாக மதுக்கரை ராணுவப் படைப்பிரிவில் உள்ளது. ராணுவத்தில் உள்ள ஒவ்வொரு படைப்பிரிவிலும் இதுபோன்ற தனித்துவமான போர் முழக்கங்கள் உள்ளன. ‘வெற்றி வேல், வீர வேல்’ என்பது மதுக்கரை ரெஜிமென்ட்டால் பயன்படுத்தப்படுகிறது. இதில் வேறு எந்த தொடர்பும் இல்லை" என்று தெளிவுபடுத்தியுள்ளார். எவ்வாறாயினும், எல்கர்பரிஷத் பீமா கோரேகான் வன்முறை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட ஸ்டான் சுவாமி போன்ற நக்சல் அனுதாபிகளை புகழும் இதுபோன்ற தெளிவற்ற ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம், பாரத ராணுவத்தை அதன் சிறுமையான அரசியல் முயற்சிக்கு இழுக்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது.

# சபரிமலை ஆடிமாத பூஜை



விஜயபாரதம்

சபரிமலை ஐயப்பன் கோவிலில் ஆடி மாத பூஜைக்காக நேற்று மாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டது. தந்திரி கண்டரரு ராஜீவரு முன்னிலையில் மேல்சாந்தி ஜெயராஜ் போற்றி நடையை திறந்து வைத்தார். வரும் 21ம் தேதி வரை பூஜைகள் நடைபெறும். முன்பு கொரோனா கட்டுப்பாட்டால் கோயிலில் பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை. தற்போது ஊரடங்கு தளர்வையொட்டி தினமும் 5 ஆயிரம் பக்தர்கள் ஆன்லைன் முன்பதிவு முறையில் சாமி தரிசனத்திற்கு 17ம் தேதி முதல் அனுமதிக்கப்படுவார்கள். தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் 48 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட ஆர்.டி.பி.சி.ஆர். நெகட்டிவ் சான்றிதழ் அல்லது கொரோனா தடுப்பூசி 2 டோஸ் போட்டதற்கான ஆன்லைன் சான்றிதழை கொண்டு வர வேண்டும். பக்தர்களுக்கான மருத்துவ சான்று மற்றும் ஆன்லைன் சான்றிதழ் பரிசோதனை நிலக்கல்லில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாட்ஸ்அப் கணக்கு முடக்கம்



விஜயபாரதம்

சமூக வலைத்தளங்களுக்கான புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளுக்கு உட்பட்டு, மே 15 முதல் ஜூன் 15 வரையில், வன்முறை உள்ளிட்ட எதிர்மறை செய்திகளை 20 லட்சம் வாட்ஸ் ஆப் பயனர்களின் கணக்குகளை அந்நிறுவனம் முடக்கியுள்ளது. இதேபோல, தவறான 3 கோடியே 20 லட்சம் பதிவுகளை முகநூல் நிறுவனமும் நீக்கியுள்ளது.

# ஓய்வூதிய விவரங்கள் வாட்ஸ்அப்பில்




விஜயபாரதம்

ஓய்வூதியம் பெறுவோருக்கு அவர்களது ஓய்வூதிய தொகை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டவுடன், அந்த விவரங்களை ஓய்வூதியதாரர்களுக்கு உடனடியாக குறுந்தகவல், இமெயில், வாட்ஸ்அப் மூலம் தெரியப்படுத்துமாறு வங்கிகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது. அதில், மாதாந்திர ஓய்வூதிய தொகை, வரி விலக்குகள் (ஏதேனும் இருந்தால்) உள்ளிட்ட அனைத்து விவரங்களும் இடம்பெற்றிருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

# நீரோட்டத்துக்கு இடையூறு கூடாது



விஜயபாரதம்

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ், ஈரோட்டில் பெரும்பள்ள ஓடையின் இருபுறமும் காங்கிரீட் சுவர் எழுப்பும் திட்டத்துக்கு தடை கோரிய வழக்கில், கடந்த ஏப்ரலில், நீர்நிலைகளின் செயற்கைக்கோள் புகைப்படங்களை பதிவேற்றம் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நேற்று அதன் மறு விசாரணையின்போது, செயற்கைக்கோள் புகைப்படங்கள் இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டது. துல்லியத்திற்காக ஜிபிஎஸ், டிரோன் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தப்படும். ஈரோடு பெரும்பள்ள ஓடை திட்டத்திற்கு மக்கள் ஆதரவு உள்ளது. அது மழைநீர் வடிகால் மட்டுமே என தெரிவித்தது தமிழக அரசு. ஆனால், நீரோட்டத்துக்கு இடையூறாக கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படுவதாக மனுதாரர் புகார் தெரிவித்தார். இதையடுத்து நீதிபதிகள், தமிழகம் முழுவதும் உள்ள நீர்நிலைகளை டிரோன் மூலமும், ஜிபிஎஸ் மூலமும் படங்கள் எடுப்பதுடன், நேரடியாக அளவீடு செய்து நீர்நிலைகளின் அளவுகளை துல்லியமாக பாதுகாக்க வேண்டும், நீரோட்டத்துக்கு இடையூறாக எந்த கட்டுமானமும் மேற்கொள்ள கூடாது என உத்தரவிட்டனர்.

# மாற்று திறனாளிகள் நிவாரண நிதி



விஜயபாரதம்

கொரோனா பொதுமுடக்க நிவாரண உதவியாக மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.133 கோடி மத்திய அரசால் ஒதுக்கப்பட்டது. இது குறித்த ஒரு வழக்கை விசாரித்த நீதிபதிகள், தமிழக அரசின் அறிக்கை முழுமையாக இல்லை, அரசு ஒதுக்கீடு செய்த ரூ.133 கோடியில் மீதமுள்ள ரூ.64 கோடியின் நிலை என்ன? ரூ.133 கோடி எப்படி வினியோகிக்கப்பட்டது என்ற விவரங்களை தெரிவிக்க வேண்டும், ரூ. 133 கோடியை முழுமையாக 13.35 லட்சம் மாற்று திறனாளிகளுக்கும் வழங்க வேண்டும் என தமிழக அரசுக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒரு வாரத்துக்கு ஒத்திவைத்தனர்.

# பொருளாதார ரீதியில் இட ஒதுக்கீடு



விஜயபாரதம்

ஆந்திர மாநிலத்தில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு, கல்வி வேலைவாய்ப்பில் 10 சதவீத இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டுள்ளது. முன்னதாக, உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி, அவர்களுக்கு ஏற்கனவே கல்வியில் இந்த ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வந்தது. அது தற்போது வேலை வாய்ப்புக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. எஸ்.சி, எஸ்.டி, பிற்படுத்தப்பட்டோர் என எந்த பிரிவிலும் இடஒதுக்கீடு பெறாத, ஆண்டு வருமானம் 8 லட்சத்திற்கும் குறைவாக உள்ளவர்கள் இப்பிரிவில் இடஒதுக்கீடு பெற முடியும் என அம்மா நில அமைச்சர் குரசல கண்ணை பாபு தெரிவித்துள்ளார்.

# மூன்றாவது அலை குறித்து ஐ.சி.எம்.ஆர்.

**கொ**ரோனா மூன்றாவது அலை குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சின் தொற்று நோய் பிரிவின் தலைவர் டாக்டர் சமிரன் பாண்டா கூறும்போது,

விஜயபாரதம்

'முதல் மற்றும் இரண்டாவது அலைகளின் போது கிடைத்த நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து வருகிறது. புதிய உருமாறிய வைரஸும், நோய் எதிர்ப்பு சக்தியை தவிர்க்கக் கூடியதாகவும் வேகம் மிக்கதாகவும் உள்ளது. அவசரகதியில் பொதுமுடக்கக் கட்டுப்பாடுகளை மாநிலங்கள் விலக்கிக் கொள்கின்றன. இதனால் மூன்றாவது அலை ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகஸ்ட் இறுதியில் மூன்றாவது அலை உருவாக அதிக வாய்ப்பு உள்ளது. ஆனால், முதல் இரண்டு அலைகளைப் போல இது தீவிரமாக இருக்க வாய்ப்பில்லை' என தெரிவித்துள்ளார்.

# பேரவை மாண்பை பேண நல்ல முயற்சி



விஜயபாரதம்

**ம**த்திய பிரதேச சட்டப்பேரவையின் மழைக்காலக் கூட்டத்தொடர் ஆகஸ்ட் 9 முதல் நடைபெறவுள்ளது. பாஜக ஆட்சி அமைந்ததில் இருந்து அங்கு நடைபெறும் முதல் சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இது. எனவே, இக்கூட்டத்தொடரில் காரசாரமான வாக்குவாதம் நடைபெறக்கூடும். இதுபோன்ற சமயங்களில், அநாகரிகமான வார்த்தை பிரயோகங்கள் நடைபெறுவதை தடுக்கவும், சட்டப்பேரவையின் மாண்பை பேணவும் அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது. அதற்காக, சட்டப்பேரவையில் தவிர்க்க வேண்டிய 300 வார்த்தைகள் அடக்கிய ஒரு சிறிய புத்தகம் தயார் செய்யப்பட்டுள்ளது. விரைவில் அனைத்து எம்எல்ஏக்களுக்கும் இந்த புத்தகங்கள் விநியோகிக்கப்பட உள்ளதாக தெரிகிறது.

# அறியப்படாதவர்களை அங்கீகரிக்கும் பா.ஜ.க


விஜயபாரதம்

அரசியல் உலகில் அறியப்படாத ஆனால் கடின உழைப்பாளிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதில் பெயர் பெற்றது பா.ஜ.க. அனேகமாக, பா.ஜ.கவின் முக்கியத் தலைவர்கள் பெரும்பாலும் ஒருகாலத்தில் மக்களால் அறியப்படாதவர்களாகவே இருந்துள்ளனர். இதற்கு சமீபத்திய உதாரணமாக, உத்தரபிரதேசம் சஹாரன்பூரில் உள்ள பலியாகேரி தொகுதியின் வட்டார வளர்ச்சிக் கவுன்சில் தேர்தலில் பா.ஜ.க சார்பில் போட்டியிட்டு அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் பா.ஜ.க உறுப்பினரான சோனியா. சோனியாவின் கணவர் சுனில் குமார், அதே தொகுதியில் துப்புரவாளராக பணிபுரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பட்டியல் வகுப்பை சேர்ந்த சோனியாவை இந்த தேர்தலில் போட்டியிட பா.ஜ.க தலைவர் முகேஷ் சௌத்ரி முன்மொழிந்தார், கட்சி உறுப்பினர்களும் ஒருமித்த ஆதரவு அளித்தனர். மேலும், தேர்தலில் போட்டியிட சுனிலும் தனது மனைவியை ஊக்குவித்தார்.

# சமாஜ்வாடி பேரணியில் பாகிஸ்தான் கோஷம்


விஜயபாரதம்

சமஜ்வாடி கட்சி, ஆக்ராவில் ஏற்பாடு செய்த கட்சி பேரணியின் போது சமாஜ்வாடி கட்சித் தொண்டர்கள், பாகிஸ்தான் ஜிந்தாபாத்' உள்ளிட்ட பாகிஸ்தான் சார்பு கோஷங்களை எழுப்பினர். இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவியது. இதற்கு பா.ஜ.க, ஹிந்து ஜாக்ரன் மஞ்ச் உள்ளிட்ட கட்சிகளும், ஹிந்து அமைப்புகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்நிலையில், சமாஜ்வாடி கட்சியின் ஆக்ரா மாவட்டத் தலைவர் வாஜித் நிசார், பேரணியின் போது பாகிஸ்தான் சார்பு கோஷங்கள் எழுப்பப்பட்டதை ஒப்புக்கொண்டார். கட்சியின் பிம்பத்தை கேவலப்படுத்த சிலர் இப்படி செயல்படுவதாக குற்றம் சாட்டினார். பங்கஜ் சிங் என்ற நபர் கோஷங்களை எழுப்பியதாக கூறப்படுகிறது. ஆனால், அதனை அவர் மறுத்துள்ளார். தொடர்ந்து உ.பியில் அல்குவைதா பயங்கரவாதிகள் சிக்கி வரும் நிலையில் இது போன்ற கோஷங்கள் கவனத்தில் கொள்ளத்தக்கது. உ.பி காவல்துறையும் இது குறித்து விசாரித்து வருகிறது.


# டிரோன் வரைவு அறிக்கை



விஜயபாரதம்

'டிரோன் தொழில்நுட்பம் வாயிலாக உலகில் புதிய தொழில்நுட்ப புரட்சி ஏற்பட்டு உள்ளது. இதனால் நேரம், செலவு குறைவு, இயக்குவது எளிது என பல நன்மைகள் உள்ளன. இந்த வளர்ச்சியை முழுமையாக, முறையாக பயன்படுத்த சட்ட விதிகளில் பல மாற்றங்கள் செய்து எளிமையாக்கப்பட்டுள்ளது. அதன்படி வெளியிடப்பட்டுள்ள வரைவு அறிக்கையில், டிரோன் இயக்க லைசென்ஸ் விண்ணப்பங்கள் 25ல் இருந்து ஆறாக குறைக்கப்படுகின்றன. சுயசான்று, அத்துமீறல் இல்லாத கண்காணிப்பு, லைசென்ஸ் கட்டணம் குறைப்பு, பைலட் லைசென்ஸ் நீக்கம் உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன. ஆகஸ்ட் 5 வரை பொதுமக்கள் இது குறித்த தங்கள் கருத்தை தெரிவிக்கலாம்' என விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

# மக்பூல் ஷெர்வானிக்கு ராணுவம் மரியாதை



விஜயபாரதம்

மக்பூல் ஷெர்வானி என்ற காஷ்மீர் இளைஞர், 1947ல் பாகிஸ்தான் பழங்குடியினர் காஷ்மீரை கைப்பற்ற முன்னேறுவதை தடுக்கவும் உள்ளூர் மக்கள் அவர்களை எதிர்த்து போராடவும் ஊக்கமளித்தார். விமானப்படை தளத்தை அந்த பயங்கரவாதிகள் ஆக்கிரமிக்காமல் தடுக்க அவர்களை தவறாக வழிநடத்தி தாமதம் செய்தார். இதனால் அவர்கள் அவரை சித்ரவதை செய்து கொன்றனர். அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, சமீபத்தில் அவரின் கல்லறையை புதுப்பித்து அங்கு அவருக்காக தொழுகை நடத்த ஏற்பாடு செய்தது நமது பாரத ராணுவம்.

# ஆப்கனுக்கு பாகிஸ்தான் எச்சரிக்கை



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானின் துணைத் தலைவர் அம்ருல்லா சலேஹ், தனது டுவிட்டர் அறிக்கையில், 'ஆப்கானிஸ்தான் ராணுவமும், ஆப்கானிஸ்தான் விமானப்படையும், தலிபான் கைப்பற்றியுள்ள ஸ்பின் போல்டாக் பகுதியை மீண்டும் கைப்பற்ற முயற்சித்தால், அவர்கள் பாகிஸ்தான் விமானப்படையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தலிபான்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று ஆப்கானிஸ்தான் படைகளுக்கு பாகிஸ்தான் ராணுவம் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், தொடர்ந்து தலிபான்களுக்கு ஆயுத தளவாட உதவிகளை பாகிஸ்தான் செய்து வருகிறது' என தெரிவித்துள்ளார்.

# மதமாற்ற முயற்சி கணவன் வழக்கு



விஜயபாரதம்

சண்டிகரில் 2008ல் ஒரு நகைக் கடையில் மேலாளராக வேலை பார்த்த சீக்கியர் ஒருவர் அந்த கடையில் பணிபுரிந்த முஸ்லிம் பெண்ணுடன் ஏற்பட்ட காதலால் அவரை திருமணம் செய்தார். அப்போது அந்த பெண், உங்களின் மத நம்பிக்கையில் ஒரு போதும் குறுக்கிடமாட்டேன் என உறுதியளித்தார். ஆனால், திருமணமான நாளில் இருந்தே மனைவியும் அவரது பெற்றோரும் அந்த சீக்கியரை முஸ்லிமாக மதம் மாற கட்டாயப்படுத்தி வருகின்றனர். அவர்களுக்கு 2012ல் ஒரு மகன் பிறந்தான். அவனை சீக்கிய முறைப்படி வளர்க்க விரும்பினார் அந்த சீக்கியர். ஆனால், அவனையும் மதம் மாற கட்டாயப்படுத்துகின்றனர். இதனால் தனக்கும் தன் மனைவிக்கும் தினமும் தகராறு ஏற்படுகிறது. மதம் மாற மறுப்பதால் தன்னை மாமனார் மாமியார் அவமானப்படுத்துகின்றனர். எனவே, என்னையும் என் குழந்தையையும் கட்டாய மதமாற்றம் செய்ய முயற்சிக்கும் எனது மனைவி மாமனார் மாமியார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சீக்கியர் ஒருவர் சண்டிகர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவை விசாரித்த நீதிபதி, இது தொடர்பாக மனுதாரரின் மனைவி மாமனார் மாமியாருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

# சீனாவில் சிக்கும் தொழிலதிபர்



சன் டாவ் என்பவர் புகழ் பெற்ற ஒரு சீன தொழிலதிபர், டாவ் குழுமத்தின் தலைவர். இவர், கொரோனாவை சீன கம்யூனிச அரசு மிக மோசமாக கையாண்டதாக விமர்சித்தார் மேலும், அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்ட ஜனநாயக ஆர்வலர்களை ஆதரித்தார். இதனால், சீன காவல் அதிகாரிகள், சன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட சுமார் 30 பேர் மீது, கலவரத்தை தூண்டுதல், பொது ஒழுங்கை சீர்குலைத்தல், சட்டவிரோத சுரங்கம், அரசு விவசாய நில ஆக்கிரமிப்பு, பொது சேவைக்கு இடையூறு, சட்டவிரோத நிதி திரட்டுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தி வழக்கு தொடுத்துள்ளனர். சீன அரசை விமர்சித்ததற்காக கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் முதல் தொழிலதிபர் சன் டாவ் மட்டுமல்ல. அலிபாபா தலைவர் ஜாக் மா உட்பட பலர் சீன அரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனெனில், பெரிய தனியார் தொழில் நிறுவனங்கள் என்றாவது ஒருநாள் தங்கள் அரசை கவிழ்க்க முயற்சிக்கக்கூடும் என்ற அச்சத்தில், சீன அதிபர் ஜி ஜின்பிங் தலைமையிலான கம்யூனிச அரசு, அவற்றின் மீதான கண்காணிப்பை தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.

# தலிபான் அமல்படுத்திய ஷரியா



விஜயபாரதம்

தொலைதூர வடக்கில் ஒரு மாகாணம் ஒன்றைக் கைப்பற்றிய தலிபான்கள் அங்குள்ள இமாம்களுக்கு ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளனர். அதில், 1998 முதல் 2001 வரை ஆப்கானிஸ்தானை அவர்கள் ஆட்சி செய்தபோது விதிக்கப்பட்ட சட்டங்களான, குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஆணின் துணை இல்லாமல் பெண்கள் வெளியே செல்லக்கூடாது, பெண்களுக்கு பள்ளிப்படிப்பு கூடாது. ஆண்கள் தாடியை வைத்திருக்க வேண்டும், பச்சை, சிவப்பு நிற ஆடைகளை அணியக்கூடாது. இசை, ஆல்கஹால், புகைப்பழக்கம் தடை உள்ளிட்டவைகள் மீண்டும் அமல்படுத்தப்பட்டுள்ளன. இதில் எந்த விதிமீறலும் குற்றம், அதற்கு கடுமையான தண்டனை உண்டு. மேலும், தலிபான் போராளிகள் திருமணம் செய்துகொள்ள ஏதுவாக இமாம்களும் முல்லாக்களுக்கும் உடனடியாக 15 வயதுக்கு மேற்பட்ட பெண்கள், 45 வயதிற்குட்பட்ட விதவைகள் பட்டியலை அளிக்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தலிபான்கள் ஆப்கானிஸ்தானை ஆண்டபோது இந்த காட்டுமிராண்டித்தனமான நடைமுறைகள் உலக நாடுகள் மத்தியில் பலத்த விமர்சனத்துக்கு உள்ளாகியது. எனவே, தற்போது இந்த சட்டங்களை அமல்படுத்துவதில் கடுமை காட்டமாட்டோம் என தலிபான்கள் வாக்குறுதி அளித்திருந்தனர். ஆனால், தற்போது அதனை அவர்கள் மீறியுள்ளனர்.


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

# சர்வதேச நீதி தினம்

இன்று சர்வதேச நீதி தினம். ஜூலை 17, 1998ல் ரோம் நகரில் நடந்த உலக நாடுகளின் மாநாட்டில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்குவதற்கான ரோம் ஒப்பந்தம் உருவானது. இதன்படி, 2002ல் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் நிறுவப்பட்டது. ஆனால், இந்த ஒப்பந்தத்தில் பாரதம், சீனா உள்ளிட்ட 40 நாடுகள் கையெழுத்திடவில்லை. அமெரிக்கா, இஸ்ரேல், சூடான், ரஷ்யா ஆகிய நாடுகள் முதலில் கையெழுத்திட்டன. என்றாலும் பிறகு இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொண்டன. இந்த நாடுகள் எல்லாம் தற்போது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்பினராக்கூட இல்லை.

இந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை பாரதம் ஆரம்பம் முதலே கடுமையாக விமர்சித்து வருகிறது. மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என்பது பரந்த பொருள் கொண்டதாக இருப்பதும், உறுப்பு நாடுகள் இல்லாத நாடுகளையும் ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் விசாரணைக்கு உட்படுத்தலாம் என்னும் விதியையும் பாரதம் எதிர்த்து வருகிறது. முக்கியமாக, அணு ஆயுதப் பயன்பாட்டைக் குற்றமாக வரையறுக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தவறிவிட்டதை பாரதம் எதிர்க்கின்றது. பாரதத்தின் இறையாண்மையையும், பாரத சட்ட சுதந்திரத்தின் அதிகாரத்தையும் இது குறைப்பதாக இருந்துவிடும் என்ற தன் அச்சத்தையும் பாரதம் வெளிப்படுத்தியது. மேலும், ஒரு தேசத்தின் எல்லைகளுக்குள் நடக்கும் செயல்பாடுகளை போர்க் குற்றங்களில் இந்த நீதிமன்ற சட்டங்கள் சேர்த்துள்ளதையும் நம் பாரதம் எதிர்த்தது.

இந்த நீதிமன்றம், வலுவான ஐரோப்பிய மேலை நாடுகளுக்குச் சாதகமாகச் செயல்பட்டுப் பின்தங்கிய நாடுகளுக்கு எதிராகச் செயல்படுவதாக தொடர்ந்து விமர்சனங்கள் எழுகின்றன. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்களைத் திட்டமிட்டுக் குறிவைப்பதாக, ஆப்பிரிக்க ஒன்றியம் வெளிப்படையாகவே குற்றம் சாட்டியது. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் இதுவரை சுமார் 12 குற்றவியல் விசாரணைகளை மட்டுமே முன்னெடுத்து உள்ளது. அவற்றில் ஜோர்ஜியா, மியான்மர் தவிர மீதமுள்ள அனைத்தும் ஆப்பிரிக்க நாடுகளே என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயபாரதம்



# உலக எமோஜி தினம்



விஜயபாரதம்

உணர்வை, தகவலை, தேவையைச் சொல்லும் எளிய குறியீட்டுப் படங்களே எமோஜிக்கள். இவை மக்களால் தற்போது முகநூல், டுவிட்டர், வாட்ஸ் அப் போன்ற சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஜப்பானியர்களின் மொழியே சித்திர எழுத்துகள்தான் என்பதால், அவர்களே எமோஜிக்கு முன்னோடிகளாக கருதப்படுகின்றனர்.

1998ல் ஜப்பானைச் சேர்ந்த எண்டிடி டொகொமோ என்ற நிறுவனம்தான் எமோஜிக்கு முதல் செயல்வடிவம் கொடுத்தது. அந்த நிறுவனத்தில் இருந்த ஷிகேடிகா குரிடா என்பவர் செய்திகளைப் படங்களாகச் சொல்ல நினைத்தார், அப்போது விரிவான படங்களைப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் இல்லாததால் அவர் உருவாக்கிய எளிய வடிவம்தான் எமோஜி.

மக்கள் அன்றாடம் வெளிப்படுத்தும் 180 வகையான உணர்வுகளைப் பட்டியலிட்டு அவற்றுக்கான எமோஜிக்களை மட்டுமே உருவாக்கினார் குரிடா. தற்போது அது பல்லாயிரம் எமோஜிக்களாக வந்துவிட்டன. இன்றைக்கு நாம் எமோஜிக்களை வைத்து மட்டுமே கதை சொல்லலாம், கவிதைகளை எழுதலாம் என்னும் அளவுக்கு எமோஜிக்களின் பயன்பாடுகள் மாறியுள்ளன. இதற்காக என்றே பிரத்யேக வலைத்தளங்களும்கூட உள்ளன. இயற்கைப்பேரிடர்களுக்கான குறியீடுகளை எமோஜிக்கள் இருந்தால் அது, எச்சரிக்கைகளை விடுப்பதை உலக அளவில் எளிதாக்கும் என்பதால், அது குறித்த ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன.

உலகில் தற்போது சுமார் 6,500க்கும் மேற்பட்ட மொழிகள் பயன்படுத்தப்படுகிறது. வருங்காலத்தில் அனைவருக்குமான ஒரே பொது மொழியாக எமோஜிக்கள் மாறிவிடும் என கருதப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் உலகளாவிய ஆய்வுகளும் இது குறித்து நடந்து வருகின்றன.

